[24th February 1969

(உ) இந்த மூல ஒப்பந்தம் 999 ஆண்டுக் கால அளவிற்கு ஆகும். மூல ஒப்பந்தம் செயலில் இருக்கும் வரையில் துணை ஒப்பந்தமும் செயலில் இருக்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட பகுதிக்கான வாடகை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40,000 ஆகும். மின்சார உற்பத்திக் காரியத்திற்காக கீழ்க்கண்ட விதங்கள் வரையறுக்கப்பட்டன.

(1) 3,500 லட்சம் யூனிட்டுகள் வரையில் ரூ. 12 கிலோவாட் ஒன்றுக்கு (ஆண்டுக்கு).

(2) 3,500 லட்சம் யூனிட்டுக்கு மிகைப்பட்ட ரூ. 18 கிலோ வாட் ஒன்றுக்கு (ஆண்டுக்கு).

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, பெரியாறு தண்ணீர் ஒப்பந்தம் செய்யும்போது பெரியாறிலிருந்து வருகின்ற கிளை ஆறுகளின் தண்ணீரும் நமக்கே சொந்தம் என்று ஒப்பந்தம் செய்ததாகத் தெரிகிறது. இப்போது அதற்கு மாறாக கேரள அரசாங்கம் அப்படி நமக்கு வருகிற தண்ணீரைக் கொண்டு போகிறார்கள் என்று கூறப்படுகிறதே அதை இந்த அரசாங்கம் பரிசிலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதுபற்றிய தகவல் இல்லை.

Ayyanar Spinning Mills, Virudhunagar

* 33 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there was any strike in the Ayyanar Spinning Mills, Virudhunagar, from 11th February 1968; and

(*b*) the conciliation proceedings taken by the Tamil Nadu Government?

விருதுநகர் அய்யனார் நூற்பு ஆலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருதுநகர், அய்யனார் நூற்பு மில்லில் 11—12—1968 முதல் வேலை நிறுத்தம் நடந்ததா ?

(இ) தமிழக அரசு சமரசம் செய்து வைக்க எடுத்த முயற்சிகள் யாவை ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : (அ) ஆம்.

(இ) தொழிலாளர் துறை மேற்கொண்ட உடன்பாட்டு முயற்சிகள் முறிவடைந்ததால், இத்தகராறு தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டது ; தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதையும் அரசு தடை செய்தது. 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

24th February 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த மில் ஏற்கனவே மூன்று ஆண்டுகளுக்கு மேல நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. மீண்டும் தொழிலாளர்கள தகராறு காரணமாக நஷ்டமேற்பட்டு அந்த மில் மூடப்பட்டுவிடுமோ என்ற பயம் எற்படுகிறது. அது இல்லாத வரையில் புதிதாக வந்துள்ள தொழிலாளர் அமைச்சர் புது கண்ணோட்டத்தோடு அதை அணுகி தீர்த்து வைப்பாரா?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : இப்போது அங்கே ஏற்பட்டிருக்கும் சுமுகமான நிலையை அருள்கூர்ந்து நண்பர் கெடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. தங்கபாண்டியன் : இப்போது நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குப் பிறகு புதிய நிர்வாகம் ஏற்பட்டிருக்கிறது. புதிய நிர்வாகத்தில் அந்த மில் லாபகரமாக ஓடிக்கொண்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : தகவலுக்கு நன்றி.

MR. CHAIRMAN : Question 34 is postponed.

Jewellery and diamonds of Tiruchendur Temple.

* 35 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the jewellery and diamonds of Tiruchendur temple were stolen; and

(*b*) if so, the value thereof?

திருச்செந்தூர் கோவில் நகைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சமயக் கட்டளை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூர் கோவில் நகைகள், வைரங்கள் திருடு போனதா?

(இ) ஆமெனில், அவற்றின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணியசுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திரு ஆபரணங்களில் சில காணமற் போயின.

(இ) ரூ. 99,075-72.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த திருட்டுப்போன நகைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா? எப்படி திருட்டு போனது என்பது பற்றிய விவரங்கள் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : திருட்டுப்போனவை பற்றி இப்போது போலீஸ் இன்வெஸ்டிகேஷன் இருக்கிறது. சில பொருள்கள் கைப்பற்றப்பட்டன. பாக்கி நகைகள் பற்றி இன்வெஸ்டிகேஷன் நடந்துவருகிறது. முடியவில்லை.